தச ஸ்லோகீ

ஸ்ரீசங்கராச்சாரியார் அருளியது

ப்ரக்ஞன்

நூல் விளக்கம்

நூலின் பெயர்	:	தச ஸ்லோகீ
ஆசிரியர்	:	ஸ்ரீமத் சங்கராச்சாரியார்
தெளிவுரை	:	ப்ரக்ஞன் [Prajnan]
மொழி	:	சமஸ்க்ருதம் - தமிழ்
வகை	:	சுயம் உணர்தல்
முதற்பதிப்பு	:	2018
நூலின் அளவு	:	டெம்மி
பக்கங்கள்	:	17
தாள்	:	A5 (5.83″ X 8.27″)
எழுத்து அளவு	:	12 புள்ளிகள்
வெளியீடு	:	பராபரம்
கணினி அச்சு	:	ஓம் கிராபிக்ஸ்
விலை	:	அக விழிப்பு

தச ஸ்லோகீ

(பகவான் ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது)

தெளிவுரை

ப்ரக்ஞன்

தச ஸ்லோகீ

दशश्लोकी

(பகவான் ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது)

(**பத்து ஸ்லோகங்கள் கொண்ட ஆத்ம மஹிமை ஸ்துதி**.)

பகவான் ஸ்ரீ ஆதிசங்கரர் தனது சீடர்களின் இறுதி வேண்டுகோள்களுக்கு பதிலளிக்கும் வகையில், இந்த பாடல்களைப் பாடினார்கள் என்று கூறப்படுகின்றது. இது வேதாந்தத்தின் இறுதி உண்மையின் முடிந்த முடிவாகிய போதனைகளின் சாரத்தை விளக்குவதாகும்.

பகவான் ஸ்ரீ சங்கரர் தனது குருவான கோவிந்த பகவத்பாதரைச் சந்தித்தபோது, முதன்முதலில் இப்பாடலைப் பாடியதாகக் கூறப்படுகிறது. இவர் தமது பாடலில், சுயத்தின் தன்மை சாக்ஷாத் அந்த ப்ரஹ்மத்துக்கு ஒத்ததாகவே இருக்கிறது. இது வரையறுக்கப்பட்ட மற்றும் உண்மையற்ற உடலையும், மனதையும் கொண்ட நம்முடைய அறியாமை சுயத்திற்கு ஒத்ததாக இல்லை என்று கூறுகிறார்.

அவர் சுயத்தை ஒன்று என்றும், அது மங்களகரமானது என்றும், அதற்கென எந்தவிதமான குண நலப்பண்புகள் எதுவும் கிடையாது மற்றும். அது நித்தியமானது என்றும் விவரிக்கிறார்.

மேலும், இங்கு படைக்கப்பட்ட சீவர்களிடையே வெளிப்படுகின்ற அத்தனை சிறப்பம்சங்களும், அவைகளுடைய தனித்திறமைகள் கிடையாது. அவைகளுக்குள்ளே அந்த தூய அறிவாகிய ஆத்மனே புலன்களின் வாயிலாகவும், மனம், புத்தி மூலமாகவும் பிரகாசித்துக் கொண்டு, அவைகளை வழி நடத்துகிறான்.

அத்தகைய **"அதுவே நான்"** என்பதே, பகவான் ஆதிசங்கரர் போன்ற மகான்கள் நமக்கு அறிவுறுத்த வருகின்ற அறுதி உண்மை. இதை நாம் ஒவ்வொருவரும் உணரும்போது மட்டுமே நம் வாழ்க்கை சுகப்படும்.

நன்றி!

என்றும் அன்புடன்,

ப்ரக்ஞன்.

न भूमिर्न तोयं न तेजो न वायुः
न खं नेन्द्रियं वा न तेषां समूहः ।
अनेकान्तिकत्वात् सुषुप्त्येकसिद्धः
तदेकोऽवशिष्टः शिवः केवलोऽहम् ॥ १॥

na bhümir–na toyam na váyur–
na kham nendriyam vá na teshám samühah,
anaikántikatvát sushuptyekasiddhas–
tadeko'vashishtah shivah kevalo'ham. (1)

ந **பூ**மிர் ந தோயம் ந தேஜோ ந வாயு:
ந **க**ம் நேந்**த்**ரியம் வா ந தேஷாம் ஸமூஹ: |
அனைகாந்திகத்வாத் ஸுஷுப்த்யேகஸி**த்த**:
த**தே**கோ(அ)வசிஷ்ட: சிவ: கேவலோ(அ)ஹம் || 1

நான் என்ற தூய அறிவாகிய ஆத்மா இந்த பூமி எனப்படும் நிலமுமல்ல, நீருமல்ல, நெருப்புமல்ல, வாயுவும் அல்ல, அவை வெளியுமல்ல, புலன்களுமல்ல. மேலும், அவைகளின் கூட்டமுமல்ல. முடிவற்று நிலைபெற்றதானதால், அது துக்கமற்ற தூக்க நிலையில் மாத்திரம் ஆனந்தமாக அறியப்படுகின்றது. இவ்வாறு எல்லாவற்றையும் நீக்கி, எஞ்சி நிற்கும் அந்தத் தனித்த **சிவமே நான்.**

न वर्णा न वर्णाश्रमाचारधर्मा
न मे धारणाध्यानयोगादयोऽपि ।
अनात्माश्रयाहंममाध्यासहानात्
तदेकोऽवशिष्टः शिवः केवलोऽहम् ॥ २॥

na varïá na varïáshramácáradharmá
na me dháraïádhyádhyánayogádayo'pi,
anátmáshrayaham–mamádhyásahánát
tadeko'vashishthah, shivah kevalo'ham. (2)

ந வர்ணா ந வர்ணாச்ரமாசார **த**ர்மா:
ந மே **தா**ரணா **த்**யான யோ**காத**யோபி |
அனாத்மாச்ரயாஹம் மமாத்யா ஸஹானாத்
த**தே**கோ(அ)வசிஷ்ட: சிவ: கேவலோ(அ)ஹம் ‖ 2

ப்ராமணன், சத்திரியன், வைசியன் மற்றும் சூத்திரன் போன்ற ஜாதிகளில் நான் இல்லை. ப்ரம்மசர்யம் முதலான ஆச்ரமம் நான் இல்லை. ஆசார தர்மமல்ல, தாரணம், தியானம், யோகம் முதலியவையும் நான் அல்ல. ஆத்மா அல்லாத பொய்ப்பொருளைச் சார்ந்து உதிக்கின்ற **"நான்" "எனது**" என்ற என்னைப் பற்றிய பொய்யான குழப்பத்தை அழிப்பதால், அனைத்தையும் விலக்கி, எஞ்சி நிற்கும் அந்தத் தனித்த **சிவமே நான்.**

न माता पिता वा न देवा न लोका
न वेदा न यज्ञा न तीर्थं ब्रुवन्ति ।
सुषुप्तौ निरस्तातिशून्यात्मकत्वात्
तदेकोऽवशिष्टः शिवः केवलोऽहम् ॥ ३॥

na mátá pitá vá na devá na loká
na vedá na yajñá na teertham bruvanti,
sushuptau nirastátishünyátmakatvát
tadeko vashishthah shivah kevalo'ham. (3)

ந மாதா பிதாவா ந **தே**வா ந லோகா
ந வே**தா** ந யக்ஞா ந தீர்த்**த**ம் **ப்**ருவந்தி |
ஸுஷுப்தௌ நிரஸ்தா**தி**சூன்யாத்மகத்வாத்
த**தே**கோ(அ)வசிஷ்ட: சிவ: கேவலோ(அ)ஹம் ‖ 3

நான் தாயுமல்ல, தந்தையுமல்ல, தேவர்களுமல்ல, உலகங்களுமல்ல, மறை நூல்களும் நானல்ல, வேள்விகள் போன்ற யாகங்களுமல்ல, புண்ணிய தீர்த்தங்களும் நான் அல்ல. ஆழ்ந்த உறக்க நிலையில் அனைத்துமற்று, ஆனந்தமாக இருக்கும் அறியமைகள் ஏதுமற்ற அந்தத் தனித்த **சிவமே நான்.**

न साङ्ख्यं न शैवं न तत्पाञ्चरात्रं
न जैनं न मीमांसकादेर्मतं वा ।
विशिष्टानुभूत्या विशुद्धात्मकत्वात्
तदेकोऽवशिष्टः शिवः केवलोऽहम् ॥ ४॥

na sáñkhyam na shaivam na tat–páncharátram
na jainam na mimámsakáder–matam vá,
vishisthánubhütyá vishuddhátmakatvát
tadeko vashishtah shivah kevalo'ham. (4)

ந ஸாங்**க்**யம் ந சைவம் ந தத்பாஞ்சராத்ரம்
ந ஜைனம் ந மீமாம்ஸகா**தே**ர் மதம் வா |
விசிஷ்டானு**பூ**த்யா விசு**த்தா**த்மகத்வாத்
த**தே**கோ(அ)வசிஷ்ட: சிவ: கேவலோ(அ)ஹம் || 4

ஸாங்க்யம், சைவம் போன்ற மதங்களும் நான் அல்ல. ஐவகை இரவு என்கின்ற பஞ்சராத்ரா என்ற மத இயக்கமுமல்ல, ஜைன மதமுமல்ல, மீமாம்ஸா முதலான மதமுமல்ல, சிறந்த மெய்யநுபூதியில் தூய்மையாக விளங்குவதால் எல்லா வற்றையும் நீக்கி, எஞ்சி நிற்கும் அந்தத் தனித்த **சிவமே நான்.**

न चोर्ध्वं न चाधो न चान्तर्न बाह्यं
न मध्यं न तिर्यङ् न पूर्वाऽपरा दिक् ।
वियद्व्यापकत्वादखण्डैकरूपः
तदेकोऽवशिष्टः शिवः केवलोऽहम् ॥ ५॥

na cordhvam na cádho ná cántar–na báhyam
na madhyam na tiryañg na pürvápará dik
viyad–vyápakatvád–akhaïãaikarüpas
tadeko'vashishtah shivah kevalo'ham. (5)

ந சோர்**த்**வம் ந சா**தோ** ந சாந்தர் ந **பா**ஹ்யம்
ந ம**த்**யம் ந திர்யங் ந பூர்வாபரா**தி**க் |
விய**த்**வ்யாபகத்வாத் **அகண்டை**கரூப:
த**தே**கோ(அ)வசிஷ்ட: சிவ: கேவலோ(அ)ஹம் ‖ 5

நான் மேல் இல்லை, கீழ் இல்லை, உள்ளில்லை, வெளியில்லை, நடுவில்லை, குறுக்கில்லை, நெடுக்கில்லை. இதில் எதுவுமே நான் இல்லை. மேலும், கிழக்கு – மேற்கு போன்ற திசைகளும் நான் இல்லை. ஆகாயம் போல் எங்கும் பரவிய வெட்டவெளியாக நான் இருப்பதால், என்னை எதனாலும் பிரிக்க முடியாத பேதமைகளற்ற, ஒரே வடிவமாயுள்ளதும், அனைத்தையும் நீக்கி, எஞ்சி நிற்கின்ற அந்தத் தனித்த **சிவமே நான்.**

न शुक्लं न कृष्णं न रक्तं न पीतं
न कुब्जं न पीनं न ह्रस्वं न दीर्घम् /
अरूपं तथा ज्योतिराकारकत्वात्
तदेकोऽवशिष्टः शिवः केवलोऽहम् // ६//

na shuklam na køshnam nqa rakta, na peetham
na kubjam na peenam na shrasvam na deergham,
arüpam tathá jyotirákárakatvát
tadeko'vashishthah shivah kevalo'ham. (6)

ந சுக்லம் ந க்ருஷ்ணம் ந ரக்தம் ந பீதம்
ந குப்ஜம் ந பீனம் ந ஹ்ரஸ்வம் ந **தீ**ர்கம் |
அரூபம் ததா ஜயோதிராகாரகத்வாத்
த**தே**கோ(அ)வசிஷ்ட: சிவ: கேவலோ(அ)ஹம் || 6

நான் வெண்மையல்ல, கருப்பல்ல, சிவப்பல்ல, மஞ்சளல்ல, நொண்டியல்ல, பருமனல்ன, அவ்வாறே நான் குறில் அல்ல, நெடில் அல்ல, உருவமுமல்ல. அதுப்போல, ஒளிவடிவமாயுள்ள அனைத்தையும் நீக்கி, எஞ்சி நிற்கும் அந்தத் தனித்த **சிவமே நான்.**

न शास्ता न शास्त्रं न शिष्यो न शिक्षा
न च त्वं न चाहं न चायं प्रपञ्चः ।
स्वरूपावबोधो विकल्पासहिष्णुः
तदेकोऽवशिष्टः शिवः केवलोऽहम् ॥ ७॥

na shástá na shástram na shishyo na shikshá
na ca tvam na cáham na cáyam prapancha:
svarüpávabodho vikalpásahishïus–
tadeeko, vashishthah shivah kevalo'ham. (7)

ந சாஸ்தா ந சாஸ்த்ரம் ந சிஷ்யோ ந சிக்ஷா
ந சத்வம் ந சாஹம் ந சாயம் ப்ரபஞ்ச: |
ஸ்வரூபாவ**போதோ** விகல்பாஸஹிஷ்ணு:
த**தே**கோ(அ)வசிஷ்ட: சிவ: கேவலோ(அ)ஹம் ‖ 7

நான் குருவல்ல, உபதேசமுமல்ல, நான் சீடனுமல்ல, கல்வியுமல்ல, நீயுமல்ல, நானுமல்ல. புலன்களுக்கு புலப்படும் இந்த உலகமும் நான் அல்ல. தன்னையறிதலால் உணரப்படுபவனும், உயரிய நிலையை உணராதவர் களுக்கான தர்க்கத்திற்கு அப்பாற்பட்ட அனைத்தையும் நீக்கி, எஞ்சி நிற்கும் அந்தத் தனித்த **சிவமே நான்.**

न जाग्रन् न मे स्वप्नको वा सुषुप्तिः
न विश्वो न वा तैजसः प्राज्ञको वा ।
अविद्यात्मकत्वात् त्रयाणां तुरीयः
तदेकोऽवशिष्टः शिवः केवलोऽहम् ॥ ८॥

na jágran–na me svapnaka vá sushuptir–
na vishvo na va taijasah prajnako vá,
avidyátmakatvát trayáïám turéyas–
tadeko'vashishthah shivah kevalo'ham. (8)

ந ஜா**க்**ரந்த மே ஸ்வப்னகோ வா ஸுஷுப்தி:
ந விச்வோ ந வா தைஜஸ: ப்ராக்ஞகோவா |
அவி**த்**யாத்மகத்வாத் த்ரயாணாம் துரீய:
த**தே**கோ(அ)வசிஷ்ட: சிவ: கேவலோ(அ)ஹம் ‖ 8

நான் விழிப்பல்ல, கனவல்ல, தூக்கமுமல்ல, நான் விழிப்பு நிலையைக் கொண்டவனல்ல, கனவு நிலையைக் கண்டவனுமல்ல, தூக்க நிலையைக் கொண்டவனுமல்ல, இம்மூன்று நிலைகளிலும் தன்னைப் பற்றிய அறியாமை உள்ளதினால், இவைகள் மூன்றையும் பார்க்கின்ற நான்காவது நிலையாகிய தூய உணர்வு வெளியாகிய வெட்டவெளி எனும் துரீயமாக விளங்கும்போது, எல்லாவற்றையும் நீக்கி எஞ்சி நிற்கும் அந்தத் தனித்த **சிவமே நான்.**

अपि व्यापकत्वात् हितत्त्वप्रयोगात्
स्वतः सिद्धभावादनन्याश्रयत्वात् ।
जगत् तुच्छमेतत् समस्तं तदन्यत्
तदेकोऽवशिष्टः शिवः केवलोऽहम् ॥ ९॥

api vyápakatvád–dhitattvaparyogát
svatahsiddhabhávád–ananyáshrayatvát,
jagat tuccham etat samastm tad–anyat
tadeko'vashishthah shivah kevalo'ham. (9)

அபிவ்யாபகத்வாத் ஹி தத்வப்ரயோ**கா**த்
ஸ்வதஸ்ஸி**த்தபா**வாத் அனன்யாச்ரயத்வாத் |
ஜ**க**த்து**ச்ச**மேதத் ஸமஸ்தம் **த**தன்யத்
ததேகோ(அ)வசிஷ்ட: சிவ: கேவலோ(அ)ஹம் || 9

மேலும், எங்குமே நான் இல்லை என மறுக்க இடமின்றி எங்கும், எதிலும் வியாபித்து விளங்குவதாலும், எல்லாவற்றிலும் தானே சுயம்பிரகாசமாக விளங்குவதாலும், தனக்கு வேறாகப் பிரிதொன்றைச் சாராததுமான, அந் தூய அறிவாகிய ஆத்மனைத் தவிர, இந்த உலகமும், இந்த உலகிலே உள்ளவைகளும் வெறும் பொய். ஆகவே, அவைகள் அனைத்தையும் நீக்கி எஞ்சி நிற்கும் அந்தத் தனித்த **சிவமே நான்.**

न चैकं तदन्यद् द्वितीयं कुतः स्यात्
न केवलत्वं न चाकेवलत्वम् ।
न शून्यं न चाशून्यमद्वैतकत्वात्
कथं सर्ववेदान्तसिद्धं ब्रवीमि ॥ १०॥

na caikam tadanyad–dvitēyam kutuh syán–
nas vá kevalatvam na cákevalatvam,
na shünyam na cáshünyam–advaitakatvát
katham sarva–vedánta–siddam braveemi. (10)

ந சைகம் ததன்யத் – த்விதீயம் குத: ஸ்யாத்
ந வா கேவலத்வம் ந சாகேவலத்வம் |
ந சூன்யம் ந சாசூன்யம் அத்வைதகத்வாத்
கதம் ஸர்வ வேதாந்தஸித்தம் ப்ரவீமி || 10

ஒன்று மட்டும் என்பதல்ல. இருமைகள் என ஏதுமில்லாத அதைத் தவிர்த்து, அதற்கு வேறாக வேறொன்று எவ்வாறு இருக்க முடியும்? நான் தனியென்பதுமல்ல, தனியற்றதுமல்ல, நான் சூன்யமுமல்ல, சூன்யமில்லாததுமல்ல.

ஏனெனில், எனக்கு வேறாக எவை இருந்தாலும், அவைகள் இரண்டு என்ற பேதமுள்ளதாகவே இருக்க முடியும்.

இருமைகளை ஒரு நாளும் ஏற்காத, எல்லா வேதாந்த நூல்களும் இருப்பது ஒன்றே! என ஒருமித்த தீர்மானித்துடன் உபதேசிக்கும் உயரிய ஆத்மாவைப்பற்றி எவ்வாறு வாக்கினால் அல்லது சொற்களால் எடுத்துரைக்க முடியும்?

// इति श्रीमद् शंकराचार्यविरचितं दशश्लोकी समाप्तं //

ஸ்ரீமத் சங்கராச்சார்யர் அவர்களால் இயற்றப்பட்ட **தச ஸ்லோகீ** நிறைவடைந்தது.

ஓம் தத் ஸத்!

தச ஸ்லோகீ

ஸ்ரீசங்கராச்சாரியார் அருளியது

ப்ரக்ஞன்